# கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-

மலர்-03 ஜனவரி-2010 இதழ்-27


## குறளமுதம்-27

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-3 - அறத்துப்பால்-முனிவர் பெருமை**

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

சுவை, ஒளி, ஊறு (தொடு உணர்வு), ஓசை, நாற்றம்(மணம்) என்ற ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறியவல்லவன் வசப்பட்டதே உலகம்.

### பனை தென்னை வள அ.கூ.சங்கங்களின்

# அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு பனை அபிவிருத்திச் சபை உதவும்!

**-பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் தெரிவிப்பு!-**

யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான வேலைத் திட்டங்களுக்கு பனை அபிவிருத்திச்சபை தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று சபையின் தலைவர் திரு. விக்கிரபால தெரிவித்தார்.



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கொத்தணிகளினதும் சமாசத்தினதும் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,


கூட்டுறவாளர்கள் மற்றும்
கற்பகம் வாசகர்கள் அனைவருக்கும்
கற்பகத்தின் இதயம் கனிந்த



தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்


பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களாயினும் சரி, கொத்தணிகளாயினும் சரி தமது அங்கத்தவர்களது அடிப்படை வாழ்வாதார மேம்பாடு சம்பந்தமான கருத்திட்டங்களைத் தயாரித்து பனை அபிவிருத்திச் சபைக்கு சமர்ப்பிப்பார்களேயானால் அவற்றை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக நாம் நடவடிக்கை எடுப்போம். எனவே ஒவ்வொரு சங்கங்களும் கொத்தணிகளும் தமது அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களை விரைவில் எம்மிடம் சமர்ப்பிக்குமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்.

# உற்பத்தி தொழிற்சாலைக்கு விண்ணப்பிக்கவும்!



யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் தமது கிளை விற்பனை நிலையங்களில் மதுபானம் விற்பனை செய்வதற்கான முன் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் திரு.கிறிஸ்டி சங்கங்களின் தலைவர்கள். பொதுமுகாமையாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண பனை தென்னை வ.அ.கூ.ச.சமாச மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோதே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

போத்தற்கள் அடைப்பதற்கான விண்ணப்பத்தை இதுவரை எம்மிடம் சமர்ப்பிக்காதவர்கள தங்களது விண்ணப்பங்களை எம்மிடம் அனுப்பி வைக்கவேண்டும். அனுமதிக்கு விண்ணப்பித்த சங்கங்களுக்கு அவற்றுக்கான அனுமதியை நாம் தற்போது வழங்கி வருகிறோம்.

(8ம் பக்கம் பார்க்க)

சிந்தனைத்துளி

" உலகுக்கு நன்மைசெய்வதே நமது நோக்கம், நமது பெயர்களை பறைசாற்றுவதல்ல"!

-சுவாமி விவேகானந்தர்-

## கற்பகக்கரு

### திட்டமிடலும் ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கங்களும்!

எந்தவொரு நிறுவனத்தினதும் வளர்ச்சியும் அதன் வெற்றியும் திட்டமிட்டு செயற்படும் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. திட்டமிட்ட செயற்பாடு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படாவிட்டால் அந்நிறுவனத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது செயற்பட்டுவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் திட்டமிட்ட செயற்பாடுகளில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய காலம் இது. கடின உழைப்பின் மூலம் உற்பத்தியை மூலதனமாகக் கொண்ட இச்சங்கங்கள் அந்த உற்பத்தியை எவ்வாறு பெருக்கலாம் என்பதில் சரியான வழியில் திட்டமிட வேண்டியது அவசியமாகும்.

இச்சங்கங்கள் தாம் தயாரிக்கும் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தில் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவ்வுற்பத்தியை உரிய முறையில் பயன்படுத்தி தமது பொருளாதார வளத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த வருட ஜூன் மாத கற்பகத்தின் கற்பகதரு பகுதியில் "ஏ-9 பாதை திறப்பும் பனை வளமும்" என்ற தலைப்பிலான ஆசிரியர் கண்ணோட்டத்தை நினைவுபடுத்தி கொள்ள வேண்டிய காலம் கனிந்து வந்துள்ளது. சங்கங்கள் பனை வளத்திலிருந்து பெறக்கூடிய மூலப்பொருட்கள் அத்தனையையும் சிறந்த முறையில் உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். பனை வளத்தின் முக்கிய உற்பத்திப் பொருளான பதநீரை (கள்ளு) பாதுகாத்து அதனை சேமிக்க வேண்டும்.

பனந்தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களி னால் பெறப்படுகின்ற இப்பதநீரை சங்கங்கள் தம் வலுவுக் கேற்ப கொள்வனவு செய்து விற்பனை செய்ய வேண்டும். விற் பனைக்குப்பின் அவற்றை வெளியே ஊற்றாமல் எஞ்சியதை பதப் படுத்தி போத்தலில் அடைத்தும், மதுசார உற்பத்திக்கு வடிசா லைகளுக்கு அனுப்பியும், பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டி ருக்கின்ற சங்கங்களுக்கு வழங்கி உற்பத்தியை பெருக்கும் வகை யிலான திட்டங்களை வகுக்க வேண்டும்.

ஏ-9 பாதை திறந்த பின் தென்னிலங்கையிலிருந்து பெருமளவு பெரும்பான்மையின மக்கள் தினமும் யாழ்ப்பாணம் வந்து செல்வதால் பனை வளத்தின் உற்பத்திப் பொருட்களுக்கு மவுசு ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில் சங்கங்கள் புது உத்வேகத்துடன் செயற்பட்டு தென்னிலங்கையிலிருந்து எடுத்து வரப்படும் போத்தற்கள்ளினை இங்கு விற்பனை செய்ய வேண் டிய துர்ப்பாக்கிய நிலையை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உற்பத்தியாளர்களினால் வழங்கப்படும் கள்ளினை மட்டுப்படுத்தி கொள்வனவு செய்யாமல் அவர்களால் வழங் கப்படுகின்ற முழு உற்பத்தியையும் பெற்று சங்கங்கள் போத் தலில் கள்ளினை அடைத்தும், மதுசார, பனை வெல்ல உற்பத் தியையும் அதிகரிப்பதன் மூலம் தென்னிலங்கையிலிருந்து வரும் போத்தற்கள்ளை தவிர்த்து எமது சங்கங்கள் தமது உற்பத்தியை தென்னிலங்கையில் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப் பினை ஏற்படுத்திக் கொள்வார்களேயானால் இதனைச் சார்ந் துள்ள அங்கத்தவர்களின் பொருளாதாரம் மேம்பாடடைவது டன் நிறுவனங்களும் தமது சொந்தக் காலில் நிற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்டுகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## வாழ்வாதார நலத்திட்டத்திற்கான நடைமுறைவிதி

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கான மாதாந்த வாழ்வாதார நலத்திட்டம் ஒன்றை அதற்கெனத் தயாரிக்கப் பட்ட நடைமுறை விதியின் மூலம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

60 வயதைப் பூர்த்தி செய்த அங்கத்தவர் ஒருவர் ஓய்வு பெற்ற தன் பின்பு அவரது பங்களிப்புக்கு ஏற்ப இவ்வாழ்வாதார கொடுப்பனவு களை மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நலத்திட்ட கொடுப்பனவை ஒரு அங்கத்தவர் பெறுவதற்கு சங்கத் தில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் தொழிற்பட்டிருக்க வேண்டும். அவர் இல்லாத காலத்தில் அவரால் குறிப் பிடப்படும் பின்னுரித்தாளிக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அந்நடைமுறை விதியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## ஓய்வுபெற்ற பணியாளர்கள் கௌரவிப்பு விழா!

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கத்தில் நீண்டகாலம் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றுச் சென்றுள்ள பணியாளர்களைக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் 4ம் திகதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 'நேசம் மகிழ்வு' கௌரவிப்பு விழா!

கோப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங் கத்தின் **"நேசம் மகிழ்வு"** கௌரவிப்பு விழா சங்கத் தலைவர் இ.உதய சூரியன் தலைமையில் அண்மை யில் நடைபெற்றது.

பனை தென்னை வ.அ.கூ. சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முன்னோடியாக இருந்து செயற்பட்டவரும், பனை அபிவிருத் திச் சபையின் முன்னாள் தலைவரு மான க.நடராசா அவர்கள் அவுஸ் ரேலியாவிலிருந்து இங்கு வருகை தந்திருந்தபோது அவரை கௌர விக்கும் முகமாக இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழாவில் சமாசப் பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரத் தினம், சங்க உபதலைவர் இ.ரகுநா தன், நிர்வாகசபை உறுப்பினர் க.தவ ராசா, ஊழியர் சங்கத் தலைவர் செ.துரைராசா ஆகியோர் விழா நாய கனுக்கு மாலை அணிவித்து கௌரவித்தனர்.

## பருத்தித்துறை சங்கத்தின் கௌரவிப்பு விழா!

பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ. சங்கம் தனது ஓய்வுபெற்ற அங்கத் தவர்கள், பணியாளர்கள், மற்றும் அங்கத்தவர், பணியாளர்களின் பிள் ளைகளில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் ஆகி யோரை பாராட்டிக் கௌரவிக்கும் விழாவினை சங்க மண்டபத்தில் சங் கத் தலைவர் சி.சிவகுமார் தலைமை யில் அண்மையில் நடத்தியது.

இவ்விழாவில் மாவட்ட கூட் டுறவு அலுவலர், கூட்டுறவு அபிவி ருத்தி உத்தியோகத்தர், சமாசப் பொதுமுகாமையாளர் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# பனை தென்னை வள நிறுவனங்களின் அபிவிருத்தியில் முகாமையும் அது தொடர்பான தொழிற்பாடுகளும்!

### முகாமையின் நன்மைகள்

01. நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு உதவும்.

02. மனித வளங்களையும், பௌதீக வளங்களையும் உச்ச பயன்பாடு பெறத்தக்க வகையில் பயன்படுத்தலாம்.

03. ஊழியரின் நோக்கத்தினை அடைந்துகொள்வதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கத்தை அடைய முடியும்.

04. முகாமைக் கருமங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றின் தொழிற்பாடுகளினூடாக நிறுவனமொன்று உச்ச பயனைப் பெறமுடியும்.

05. ஒவ்வொரு ஊழியருக்கும் ஆற்ற வேண்டிய வேலைகளின் இலக்கினை நிர்ணயித்துக் கொள்வதன் மூலம் அவரிடமிருந்து உச்ச பயனைப்பெற்றுக் கொள்ளலாம்.

06. முகாமைக்கும், ஊழியருக்குமிடையே நல்ல உறவுகளை விருத்தி செய்ய முடியும்.

07. ஊழியரின் தனிப்பட்ட பிரச்சினையை தீர்ப்பதன் மூலம் ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியும்.

08. ஒருவருடைய அனுபவம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகையால் அவருடைய சேவை ஆயுட்காலம் முழுவதும் நிறுவனத்திற்காகப் பயன்படும்.

09. ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தீர்மானம் எடுப்பதில் பலர் பங்குபற்றுவதால் சிறந்த தீர்மானங்கள் எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கும்.

10. நிறுவனத்தின் எவ்வெவ் பகுதிகளில் எவர், என்ன செய்கின்றார் என்ற விடயங்களை மேலதிகாரி தெரிந்து கொள்ளமுடியும்.

11. ஒரு நிறுவனத்தின் அதிகார அமைப்பானது எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ளலாம்.

### ஒரு நிறுவனத்தின் முகாமையாளருக்கு இருக்க வேண்டிய குணாம்சங்கள்

01. எல்லாப் பணியாளர் முன்னிலையிலும் பொதுமுகாமையாளர் என இனங்காணக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

02. பணியாளர்களை அன்பாகவும், தனது செயற்றிறன் வலுவாற்றலாலும், பணிவான வார்த்தைப் பிரயோகங்களாலும் கட்டுப்படுத்தி வைப்பவராக இருத்தல் வேண்டும்.

03. பணியாளர்களின் நடுநிலைவாதியாகச் செயற்படுதல் வேண்டும்.

04. நிறுவனத்தின் நோக்கத்தின்பால் முகாமை செய்பவராக இருத்தல் வேண்டும்.

05. முகாமைத்துவக் கற்கைநெறியில் பயிற்சி பெற்றிருத்தலுடன், பாண்டித்தியமும் பெற்றவராகவும், முகாமை அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

06. முகாமைப் பண்புள்ளவராக இருத்தல் வேண்டும்.

07. வேண்டியோ, வேண்டாமலோ அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் நிறுவனச் செயற்பாடுகள் தொடர்பாக வருபவர்களை புன்னகையுடன் வரவேற்று அவர்களுக்கு தகுந்தவாறான பதில்களை வழங்குதல்.

08. நிறுவனத்தின் இலக்கான இலாப, சேவை நோக்கத்தின் அபிவிருத்திக்கு அயராது உழைத்தல்.

09. பணியாளருக்குரிய தேவைகளை நிறைவேற்றி பணியாளருக்குரிய கடமைப் பகிர்வுகள் வழங்குவதுடன், பணியாளரின் கடமை தொடர்பான கடமைப் பட்டியல் வழங்கி அவர்களுக்குரிய கடமைப் பொறுப்புக்களை தெளிவுபடுத்தி அவர்களின் கடமையை முகாமை செய்பவராக இருத்தல் வேண்டும்.

10. பேச்சாற்றல் மிக்கவராகவும், ஆளுமை விருத்தியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

11. பணியாளரின் குடும்ப நலனில் அக்கறை உடையவராக இருத்தல் வேண்டும்.

12. முகாமையாளர் நடை, உடையில் மிடுக்குள்ளவராகவும், சைகை மூலமும் பணியாளரை வேலையில் ஈடுபடுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

13. பணியாளர்களை பணிதொடர்பில் பழிவாங்காது பணியாளர்களை அன்பால் கட்டுப்படுத்தி நிறுவனத்தின் வெற்றிக்கு உழைப்பவராக இருத்தல் வேண்டும்.

14. நிறுவனத்தின் சொத்துக்களைச் சூறையாடாது நிறுவனத்தின் அபிவிருத்தியை முழுமூச்சாகக் கொண்டு செயற்படுபவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நற்பண்புகளுடனும், கடமைக்களை திறம்பட ஆற்றக் கூடிய ஆற்றலுடனும் ஒரு நிறுவனத்தின் முகாமை செயற்படுமாயின் அது ஒரு வெற்றியடைந்த இலாபத்துடனான செயற்பாட்டையுடைய நிறுவனமாகத் திகழும் என்பது கண்கூடு.

-முற்றும்-

வி.மாலினி
வலிகாமம் கொத்தணி




அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் முன்பள்ளிகளின் மாணவர்களுக்கான இலவச சீருடை வழங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக கலைமதி முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு கலைமதி மக்கள் பொதுமண்டபத்தில் கடந்த 28-12-2009 ல் நடைபெற்றபோது, சங்கப் பொதுமுகாமையாளர் திரு.பொ.செல்வராசா உரையாற்றுவதையும், அவர் முன்பள்ளி மாணவன் ஒருவருக்கு சீருடை வழங்குவதையும் படங்களில் காணலாம்.




**"அறிவுக் கனியாகும் வாழைக்கனி"**

மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும் வாழைப் பழம் நம் உடலுக்கு நல்ல போஷணையைத்தரும். அதனால் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது.

**"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு"**

அதிக விருப்பமான உணவு என்றாலும், சுகமாக்கும் மருந்து என்றாலும், விரும்பிய செயல் எதுவென்றாலும் அளவுக்கு மிகுதியாகப் போனால் அது அமிர்தமாக இருக்காது. நஞ்சாக மாறிவிடும்.

**"அகத்தீயை யகற்றும் அகத்தி"**

உடம்பிலுள்ள வெப்பத்தை நீக்கும் குணமுடையது அகத்தி என்ற இலையாகும். இதை உண்பதனால் வயிற்றெரிவு, உடல் எரிவு என்பன தணியும்.

**"அசனம் பாதி ஆசனம் பாதி"**

உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி அத்தியாவசியம், அத்துடன் சத்துணவுள்ள கீரைவகை, மரக்கறி, பால்வகை என்பனவும் சேர்த்தால்தான் இன்னும் ஆரோக்கியம் மேம்படும்.

**"ஆனை நெருஞ்சல் அருகிலிருக்க பானை வயிறு ஏதுக்கடி"**

பெரிய வயிறுள்ளவன் என்றால் வயிற்றில் நீர் சேர்ந்துள்ளவனுக்கு ஆனை நெருஞ்சில் என்ற மூலிகையை சேர்த்துக் கொடுத்தால் நீர்வற்றும் என்பதாகும்.

**"வல்லாரை உண்டால் வல்லாரை வெல்லலாம்"**

வல்லாரை என்ற மூலிகையை உணவுடன் சேர்த்து உண்பதனால் ஞாபகசக்தி அதிகரிப்பதுடன், உடற்பலமும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ளவனை வெல்லலாம்.

**"பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்"**

பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவது நச்சுத் தன்மை யிருந்தாலும் பத்து மிளகு விஷத்தைப் போக்கும். அதனால் எமது உணவிலும் மிளகு சேர்ப்பதனால் அதிலுள்ள நஞ்சினைப் போக்கும்.

**"மாதா ஊட்டாத அன்னத்தை மாங்காய் ஊட்டும்"**

மாங்காய் அதிக சத்து நிறைந்தது. அதில் Ca, P, Fe, vit, A, citric acid போன்றவை அடங்கியிருப்பதால் தாய் அன்னம் ஊட்டாவிடினும் அன்னத்தின் போசணையை மாங்காய் தரும்.

**"மண்பரவு கிழங்குகளில் கருணையின்றிப் புசியோம்"**

கிழங்குகள் எல்லாவற்றிலும் கருணைக் கிழங்கானது சிறந்தது, ஏனெனில் மற்றைய கிழங்குகளில் இனிப்பு அதிகமாகவும், வாய்வுத் தன்மை கூடியதாகவும் இருக்கும். ஆனால் கருணைக்கிழங்கானது எமக்கு இறைவனால் கருணையாக வழங்கப்பட்டது. மலமிளக்கியாகத் தொழிற்பட்டு மலச்சிக்கல், மூலநோய் உள்ளவர்களுக்கு சிறந்தது.

**"அரவந் தீண்டில் அழிஞ்சி வேர்ப் பட்டையிடு"**

பாம்பு தீண்டினால் அழிஞ்சில் வேர்ப் பட்டையை இடுவதினால் விஷம் நீங்கும்.

**"கோளையை இளக்குங் குப்பைமேனி"**

சளியை, இளக்கி வெளியேற்றும் குணமுள்ளது குப்பைமேனி என்ற மூலிகையாகும்.

**"சுக்கைப்போல் மருந்தில்லை, சுப்பிரமணியம்போல் தெய்வம் இல்லை"**

கருணைவள்ளலான சுப்பிரமணியக் கடவுள் எம்மைக் காப்பதுபோல, மருந்துகளில் சுக்கு சேர்த்துச் செய்வது எம்மைக் காக்கும்.

**"வில்வம் பழம் தின்பார் பித்தம்போக, பனம்பழம் தின்பார் பசி போக"**

வில்வம் பழமானது வயிற்றுப்புண், பித்தம் போன்ற வற்றை நீக்கும். பனம்பழம் அதிக போசணை உள்ளதி னால் பசியை போக்கும். - நன்றி: "ஆரோக்கியம்"-




01. ஏதென்ஸ்-கிரீஸ் - 1896
02. பாரிஸ் - பிரான்ஸ் - 1900
03. செயின்ட் லூயிஸ்-ஐக்கிய அமெரிக்கா-1904
04. லண்டன்-இங்கிலாந்து-1908
05. ஸ்டாக்ஹோம்-சுவீடன்-1912
06. உலகப்போர் காரணமாக நடைபெறவில்லை-1916
07. ஆண்ட்வெர்ப்-பெல்ஜியம்-1920
08. பாரிஸ்-பிரான்ஸ் - 1924
09. ஆம்ஸ்டர்டாம்-ஹாலாந்து-1928
10. லொஸ்ஏஞ்சல்ஸ்-ஐக்கிய அமெரிக்கா-1932
11. பேர்லின்-ஜேர்மனி- 1936
12. உலகப்போர் காரணமாக நடைபெறவில்லை-1940
13. உலகப்போர் காரணமாக நடைபெறவில்லை-1944
14. லண்டன்-இங்கிலாந்து-1948
15. ஹெல்சின்சி-பின்லாந்து-1952
16. மெல்பேர்ன்-அவுஸ்ரேலியா-1956
17. ரோம்-இத்தாலி -1960
18. டோக்கியோ-ஜப்பான்-1964
19. மெக்சிக்கோ-அமெரிக்கா-1968
20. மியூனிச்-ஜேர்மனி-1972
21. மொன்றியல்-கனடா-1976
22. மொஸ்கோ-சோவியத்யூனியன்-1980
23. லொஸ்ஏஞ்சல்ஸ்-ஐக்கியஅமெரிக்கா-1984
24. சியோல்-தென்கொரியா-1988
25. பார்சிலோனா-ஸ்பெயின்-1992
26. அட்லாண்டா-ஐக்கியஅமெரிக்கா-1996
27. சிட்னி-அவுஸ்ரேலியா-2000
28. ஏதென்ஸ்-கிறீஸ் - 2004
29. பெய்ஜிங்-சீனா -2008
30. லண்டன்-ஐக்கியராச்சியம்-2012

தொகுப்பு: வ.சிவகுமார்

## வாழ்த்துவோம் ..... என்றும்!

இருட்டுக்குள் வாழும் உள்ளங்களுக்காய்
வழி தொலைத்திட்ட விழிகளுக்காய்
வறுமையில் வாடும் வண்ணமலர்களுக்காய்
வறுமைகள் அகல வெறுமைகள் நீங்க
வளங்கள் பெருக மனங்கள் மகிழ
வண்ணக்கவி தொடுத்து வாழ்த்துவோம்
மலர்ந்திட்ட தைத்திருநாளுடன்
பிறந்திட்ட தைத்திங்களே
நல்லன தந்து வல்லன பெருக
வழிதரவேண்டுமென்று வாழ்த்தி
கற்பகமே உன்பணிதொடரவும்
உளமார வாழ்த்துகிறேன்.

-செல்வி பா.மதனரூபி-

## கற்பகதரு!



நீண்டுயர்ந்து வளர்பவள்
நீண்டநாள் வாழ்பவள்
ஆண்டாண்டு காலமவள்
ஆற்றிடும் பணிகளோ அளவில

காட்டிலும் வாழ்பவள்
ஏட்டிலும் வருபவள்
நாட்டிலும் வீட்டிலும்
நற்பணி புரிபவள்

மூவேந்தர் உண்ட முக்கனி
மூதாட்டியும் உண்ணும் சுவைதனி
நாவோ சுவைக்கும் பனம்பழம்
பனாட்டின் சுவையோ தனிரகம்

விதைமுளைத்து உருவாகும்
கிழங்கதற்குப் பெயராகும்
ஒடியல் புழுக்கொடியலினை அது தரும்
ஒடியல்பிட்டு கூழ் எனவும் சுவை தரும்

வீட்டுக்கு வேலிதனை அடைப்பதற்கும்
பெட்டி பாய் முதலியன இழைப்பதற்கும்
மாட்டிற்கும் ஓலையது தீனியாகும்
மட்டையது அழகுதரும் வேலியாகும்.

எத்தனை எத்தனை கொடைகள்
இத்தரையில் இவள் தந்து
அத்தனை கொடைகளும்
அரும்பெரும் பொக்கிஷங்கள்

பதநீர் பனங்கள்ளு
பருகிடும் பானமாகும்
பதநீரை பதமாக்கின்
இனிப்பான பனங்கட்டியாகும்

வான்நோக்கி வளர்ந்த
வான்பயிர்களில்
தான்தோன்றி வளர்ந்த
தகைமை அவளுடையது

நற்பண்டங்கள் பற்பல
நம்மவர்க்கு நல்கிய
கற்பகத்தின் பெருமை
கணக்கில் அடங்காதவையே!

-கே.எம் தியாகராஜா-

## மலர்களோடு பேசுங்கள்!

மலர்களோடு பேசுங்கள்
கமழும் மலர்களோடு பேசுங்கள்
இனய இதழ்கள் பாருங்கள்
இதயம் திறந்து பேசுங்கள்

பூத்துக் குலுங்கும் ரோஜாக்கள்-நல்ல
புதுமைகொண்ட தாமரைகள்
பார்க்கப் பார்க்க பரவசமே
பரிவு கொண்டே பேசுங்கள்

வாசம் வீசும் மலர்கள்-நம்
சுவாசம் கவரும் மலர்கள்
இதழ்களில் மலர்களின் சிரிப்பு
அவற்றுடன் பேசினால் நமக்கும் பூரிப்பு

மகரந்த மணிகள் மலரும்-அதைக்
கண்டதும் வண்டுகள் மகிழ்வில்
துள்ளிக்குதிப்பதைத்தான் பாருங்கள்
துயர்விட்டே மலர்களோடு பேசுங்கள்

இனிய இதழ்களில் வீற்றிருக்கும்
அளவிலா அழகினைப் பாருங்கள்
உவகையுடன் அவற்றோடு பேசுங்கள்
உளம் உன்னதமாகிடும் பேசுங்கள்

-எல். சிவாஜினி-

கவியின்பம்

# கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள்!

# ACTIVITIES OF CO-OPERATIVE EMPLOYEES BEHAVIORS

திரு.இ.சுப்பிரமணியம் -B.A.

### கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்காற்று ஒழுங்குவிதிகள்

1972ம் ஆண்டின் 12ம் இலக்க கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் அத்தியாயம் நான்கில் (iv) கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்காற்று நடவடிக் கைகளுக்கான ஒழுங்கு விதிகள் ஒழுங் காக முன்மொழியப்பட்டுள்ளன.

இவ்வொழுங்கு விதிகளின் பிர காரம் கூட்டுறவுப் பணியாளர்களின் ஒழுக்கத்தைப் பேணுதல், கட்டுப்படுத் துதல், ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுதல், இடைநிறுத்துதல், தண்டனை வழங்குதல், வேலை நீக்கம் செய்தல் போன்ற முக்கிய கடமைகள் யாவும் கூட்டுறவுச் சங்கங்களின் நெறி யாளர் குழுக்களிடம் கையளிக் கப்பட்டுள்ளது. (விதி 77) அவை பின் வருமாறு,

01. கூட்டுறவு பணியாளர் ஆணைக்குழு மேற்படி ஒழுங்குவிதி களுக்கு மேலதிகமாக காலத்திற்கு காலம் தேவைக்கேற்ப பிரகடனப்படுத் தும் ஒழுங்கு விதிகளையும் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுக்கள் தவறாது கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். (விதி 77).

02. கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுக்களினால் பணியாள ருக்கெதிரான வழக்குகளில் வழங்கும் தீர்ப்புக்களுக்கு பணியாளர்களின் மேன் முறையீடுகளுக்கு கூ.ப.ஆ.குழு மேன் முறையீட்டு அதிகாரசபையாகச் செயற் படும்.

03. கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுக்கள் தமது பணியா ளர்களுக்கெதிரான ஒழுக்காற்று விசார ணைகளை ஒழுங்காகவும், நேர்மையா கவும் நடத்துவதற்குத் தேவையான சாதகமான போதுமான சான்றா வணங்களையும், சாட்சியங்களையும் தேடித் திரட்டிக்கொள்ளுவதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்க முன்னர் ஆரம்பத்தில் "ஆரம்ப விசாரணை களை" (Commencement Inquiery) நடத்துதல் மிகமிக அவசியமாகும். (விதி 80)

### ஆரம்ப விசாரணை அல்லது தொடக்கப் புலனாய்வு

கூட்டுறவுச் சங்கங்களில் பணி யாளர்களுக்கெதிரான வழக்கொன்று தோன்றும்போது, அவர்களுக்கெதிரான ஒழுக்காற்று விசாரணையை சட்டப்படி ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடத் துவதற்குத் தேவையான உண்மை யான, சரியான சான்றாவணங்களை யும், சாட்சியங்களையும் தெளிவாகத் தேடிக் கண்டறிந்து போதியமட்டில் திர ட்டிக்கொள்ளுவதற்காக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்க முன்னர் ஆரம் பத்தில் நடத்தப்படும் பரிசீலனை ஆய்வே ஆரம்ப விசாரணை ஆகும்.

முழுமையான, பூரணத்துவ மான விசாரணை ஒன்றின்மூலம் ஒரு வர் புரிந்த குற்றங்களை நேர்மை யான, சரியான சான்றாவணங்கள் மூலமும், சாட்சியங்கள் மூலமும் பூர ணமாகவும், மிச்சமெதுவுமின்றியும் நிரு பித்த பின்னரே அவருக்குத் தண்டனை களை வழங்க வேண்டும். பூரணமான சட்டப்படியான விசாரணை நடத்தப்ப டாமல் எவருக்கும் தண்டனைகள் வழங்கப்படலாகாது. இது இயற்கை நீதியின் முக்கியமான நீதி நியாயக் கோட்பாடாகும். (Natural Theory of Justice) இக்கோட்பாட்டுக்கமைய பூரணமான, நேர்மையான, ஒழுக்காற்று விசாரணையை நடத்திக் குற்றங்களை நிரூபித்த பின்னரே ஒருவருக்குத் தண் டனை வழங்க வேண்டும்.

ஆரம்ப விசாரணையொன்றின் மூலம் நிறுவனம்பெறும் சான்றாவணங் களும், சாட்சியங்களும் ஒழுக்காற்று விசாரணைகளில் முதன்மை பெறு வதினால் ஆரம்ப விசாரணை ஒழுக் காற்று விசாரணையின் நேர்மையை யும், நியாயத்தையும் நிலை நாட்டும் ஊன்று கோலாக விளங்குகின்றது. ஆதலால்தான் கூ.ப.ஆணைக் குழுவின் ஒழுங்குவிதிகளில் ஒழுக்காற்று விசார ணைகளில் ஆரம்ப விசாரணை வலியு றுத்தப்பட்டுள்ளது. (விதி 80)

எல்லா ஒழுக்காற்று விசார ணைகளுக்கும் ஆரம்ப விசாரணைகள் அவசியமாவென்பதில் சில கருத்து முரண்பாடுகளும் நிலவுகின்றன. ஒரு பணியாளர் புரிந்த குற்றங்களை திட்ட வட்டமாகவும், ஆணித்தரமாகவும், பூர ணமாக நிரூபிக்கக்கூடிய வகையில் கணக்கேடுகளும், கணக்குப் பதிவுக ளும், ஆவணங்களும், உறுதிச்சிட்டை களும் சட்டப்படி ஒழுங்காகப் பேணி பாதுகாத்துவரும் சிறந்த நிறுவனங்க ளுக்கு சான்றாவணங்களையும், சாட்சியங்களையும் தேடிக்கண்டுபிடிக் கவும், திரட்டிக்கொள்ளவும் ஆரம்ப விசாரணை அவசியமென்ற கூற்று சிறப்பாக இயங்கும் நிறுவனங்களுக்கு வீணான நிதிச் செலவையும், வேலைப் பழுவையும், வேலைத்தடங்கல் களையும் ஏற்படுத்தும் செயலென்று சிலர் வன்மையாக விமர்சித்துள்ளனர்.

ஒழுக்காற்று விசாரணையிலும், மேன்முறையீட்டு விசாரணையிலும் சங்கம் தோல்வியடைந்தால், சங்கம் இடைநிறுத்தியுள்ள பணியாளருக்கு இடைநிறுத்தப்பட்ட காலத்திற்குரிய சம்பளம், பணியாளர் சேமலாப நிதி, பணியாளர் நம்பிக்கை நிதி, பணியா ளர் பணிக்கொடை, வழக்குச் செலவுத் தொகை போன்றவற்றைப் பெருந் தொகையாக செலுத்த வேண்டிய துர்ப் பாக்கிய நிலையில் பல கூட்டுறவுச் சங்கங்கள் அவதிப்படுவதை நாம் நடைமுறையில் பெருமளவில் காண் கிறோம்.

-வளரும்-

# நிகழ்வுகளின் நிழல்கள் !

## கடந்த நவெம்பரில் நடைபெற்ற கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு-2009 நிகழ்வில் உரைநிகழ்த்தி ய பிரமுகர்களில் சிலர்....


யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்
என்.சண்முகலிங்கன்


யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்
கி.இராஜேஸ்கண்ணன்


யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதி
க.தேவராசா


யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்
ஜி.மிகுந்தன்


சமாசத் தலைவர்
த.சிவலிங்கம்


சமாசப் பொதுமுகாமையாளர்
ஜே.பி.குனரத்தினம்


பனை அ.ச.முன்.பொ.முகாமை.
கோ.கோகுலதாசன்


பனை அபி.சபை முன்னாள் தலைவர்
க.நடராசா



அண்மையில் அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்திருந்த பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும், சமாசத்தின் ஆரம்பகாலச் செயலாளருமாகிய திரு.க.நடராசா ஆசிரியர்கள் அவர்கள் கோப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கத்திற்கு வருகைதந்திருந்தபோது அவரை வரவேற்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் மங்கள விளக்கேற்றப்படுவதையும், மலர்மாலை அணிவித்து அவர் வரவேற்கப்படுவதையும், சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் உரையாற்றுவதையும், சங்க பொதுமுகாமையாளர் திரு.க.கிருஸ்ணராஜன், சமாசத்தின் பொதுமுகாமையாளர் திரு.ஜே.பி.குனரத்தினம், மற்றும் நிர்வாகிகள், ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# கோண்டாவில் சங்கம் 2010ம் ஆண்டுக்கான தனது கல்வி செயற்பாட்டுக்கு நிதி ஒதுக்கியது!

கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம் 2010ம் ஆண்டுக்கான கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு சுமார் 4 இலட்சத்து 98 ஆயிரத்து 350 ரூபாவை ஒதுக்கியுள்ளது. கல்வி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பண விபரம் வருமாறு,

கூட்டுறவுப் பயிற்சிகளுக்கு 9ஆயிரத்து 100 ரூபாவும், ஏனைய நிறுவனப் பயிற்சிகளுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளமாக ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவும், சுழற்சி முறைக்கொடுப்பனவுக்காக 60 ஆயிரம் ரூபாவும், புலமைப்பரிசில் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவும், சங்கத்தின் கூட்டுறவுதின விழாவுக்கான ஒதுக்கம் 50 ஆயிரம் ரூபாவும், முன்பள்ளி மாணவர் போசாக்கு, சீருடை விநியோகம் 5 ஆயிரம் ரூபாவும், சமாசப் பாடசாலை உபகரண விநியோகம் 5 ஆயிரம் ரூபாவும், மூக்குக் கண்ணாடி வழங்கல் திட்டத்திற்கு 19 ஆயிரத்து 800 ரூபாவும், முன்பள்ளி மாணவர் விளையாட்டுப் போட்டிகளுக்கு 16 ஆயிரம் ரூபாவும், மாலை நேர வகுப்புக்களுக்கு 6 ஆயிரம் ரூபாவும், மரண, நிரந்தரப் பாதிப்புக் கொடை 7 ஆயிரத்து 200 ரூபாவும், சங்கம் பாடசாலை உபகரணம் வழங்கல் 50 ஆயிரம் ரூபாவும், சன சமூக நிலைய அன்பளிப்பு 2 ஆயிரம் ரூபாவும், மகளிர் உறுப்பினர் பயிற்சிக்கு 3 ஆயிரத்து 250 ரூபாவும், முன்பள்ளி மாணவர் பரீட்சை 5 ஆயிரம் ரூபாவும், பல்கலைக்கழக மாணவர் கல்விக்கொடை 8 ஆயிரம் ரூபாவும், க.பொ.த பிரிவு கொடை 18 ஆயிரம் ரூபாவும், முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு 7ஆயிரத்து 500 ரூபாவும், சிறந்த உறுப்பினர், பணியாளர் கௌரவிப்பு 25 ஆயிரம் ரூபாவும், பாடசாலைக்கு செல்லும் முன்பள்ளி மாணவர் கௌரவிப்பு 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிந்திக்கச் சில......

என்னுடைய வேதனைகளையும் வலிகளையும் நீக்கும்படி நான் உன்னைக் கெஞ்ச மாட்டேன். ஆனால் அவற்றை வெல்ல வலிமையுள்ள இதயத்தை எனக்குக் கொடு.

-ரவீந்திரநாத் தாகூர்-

நூறு கைகளினால் பொருளைச் சேர்த்து ஆயிரம் கைகளினால் அதனை பிறருக்கு அளி.

-அதர்வன வேதம்-

வாழ்க்கையில் நீ வெற்றிபெற வேண்டுமானால் முயற்சியை நண்பனாக்கிக் கொள், அனுபவத்தை ஆசானாக அமை, முன்எச்சரிக்கையை உன் மூத்த சகோதரனாக நினை, நம்பிக்கையை உன்னை வளர்க்கும் தந்தையாக நம்பு.

-ஜே அடிகள்-

-தொகுப்பு: ப.மதனரூபி-

## உற்பத்தி தொழிற்சாலைக்கு.......

1ம் பக்க தொடர்ச்சி

கோப்பாய், காரைநகர், யாழ்ப்பாணம், அரியாலை, ஊர்காவற்றுறை, கொடிகாமம் மற்றும் கரவெட்டி ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போத்தற்கள் அடைப்பதற்கான விண்ணப்பங்களை உடனடியாக எமக்கு அனுப்பி வைக்க வேண்டும். எமது திணைக்களத்தைப் பொறுத்தவரை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களது பொருளாதார மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கி வருகிறது என்றார்.


யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான முக்கிய வளங்களான பனை, தென்னை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் எமது சங்கத்தின் உற்பத்திகளான

பனை வெல்லம் | போத்தற் பனங்கள்ளு

போன்றவற்றை எல்லாக் காலங்களிலும் தரமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் எமது நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் அங்கத்தவர், பணியாளர் நலநோக்குடன் முன்னெடுக்கப்படும் சேவைகளாவன,

கிராமிய வங்கிச் சேவை. | தொலைபேசிச் சேவை. | வாடகைக் கதிரைச் சேவை.



330, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2492


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.